ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

# இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(II)

காலம் 03 மணித்தியாலங்கள்

## பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) - 14

විභාග අංකය
Index No / சுட்டெண் ..............................

- ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

1. i. அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரம் உண்மையிலேயே சுருங்குவதற்கு தாக்கம் செலுத்திய அடிப்படையான காரணிகளை விளக்குக. (08 புள்ளிகள்)

   ii. பேரினப் பொருளியல் உறுதியின்மை என்பதன் மூலம் கருதப்படுவது யாதென்பதை கலந்துரையாடி அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் உறுதியின்மைக்கு உள்ளான பேரினப் பொருளியல் மாறிகளை விபரிக்க. (12 புள்ளிகள்)

2. i. முதலீட்டுக்கு முக்கியத்துவம் பெறும் உலகளாவிய சுட்டிகள் இரண்டை (02) சுருக்கமாக குறிப்பிட்டு அந்த உலகளாவிய சுட்டிகளுக்கு அமைய இலங்கையின் நிலமை எவ்வாறுள்ளது என்பதை கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

   ii. முதலீட்டுத்துறையில் கவர்ச்சியை அதிகரிப்பதற்கு இலங்கையில் விருத்திசெய்யப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்ட பிரதான துறைகள் ஐந்தை (05) சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

3. i. வெளிநாட்டு வேலைவாய்ப்பின் பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   ii. இலங்கையைச் சேர்ந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளோரினது பணம் அனுப்புதலை அதிகரித்துக்கொள்வதில் காணப்படும் தடைகள் யாதென்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

4. i. மத்திய வங்கியின் நாணயக் கொள்கை என்பதன் மூலம் கருதப்படுவது யாது? (10 புள்ளிகள்)

   ii. அண்மைய ஆண்டுகளில் மத்திய வங்கியினால் செயற்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை கருவிகள் (Monitory Policy Instruments), அவற்றின் சந்தை மற்றும் பொருளாதார தாக்கங்களை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

5. i. பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் என்பதன் மூலம் கருதப்படுவது யாதென்பதை விளக்கி, அதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக விபரிக்க. (10 புள்ளிகள்)

   ii. இலங்கைப் போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றுக்கு பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் போது முகம்கொடுக்க நேரிடுகின்ற பிரதான சவால்களை சுருக்கமாக கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

6. i. சேதனப் பசளையை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தை (Organic Agriculture) ஊக்குவிப்பதன் பொருளாதார மற்றும் சமூக ரீதியான முக்கியத்துவத்தை சுருக்கமாக விபரிக்க. (10 புள்ளிகள்)

ii. சேதனப் பசளையை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தை ஊக்குவிக்கும் போது இலங்கை முகம்கொடுக்கும் பிரதான சவால்களை விவரிக்க. (10 புள்ளிகள்)

7. i. ஒரு நாட்டினது வெளிநாட்டு வள இருப்பு என்பதன் மூலம் கருதப்படுவது யாதென்பதை விளக்கி, வெளிநாட்டு வள இருப்பு குறைவடையும் போது நிகழும் பொருளாதார மற்றும் சமூக பின்விளைவுகளை பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

ii. அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வெளிநாட்டு வள இருப்பு துரிதமாக குறைவடைவதற்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணிகள் யாவை? (10 புள்ளிகள்)

************